அதிமுக அலுவலக விவகாரம்

உச்சநீதிமன்றத்தில் இபிஎஸ் கேவியட் மனு

நமது நிருபர்

புது தில்லி, ஆக. 6: அதிமுக அலுவலகத்துக்கு வைக்கப்பட்ட சீலை அகற்றி அதன் சாவியை எடப்பாடி கே.பழனிசாமி தரப்பினரிடம் ஒப்படைக்க சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ள நிலையில், எடப்பாடி கே.பழனிசாமி கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார்.

உயர்நீதிமன்ற அனுமதியின் பேரில் கடந்த ஜூலை 11-ஆம் தேதி சென்னையில் அதிமுக பொதுக் குழு கூட்டம் நடைபெற்றது. இதனிடையே, சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகமான எம்ஜிஆர் மாளிகைக்கு ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் சென்றபோது, எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, கட்சியின் அலுவலகத்துக்கு வருவாய்த் துறையினர் சீல் வைத்தனர்.

இதையடுத்து, கட்சித் தலைமை அலுவலகத்துக்கு உரிமை கோரி எடப்பாடி கே. பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி சதீஷ் குமார், கடந்த ஜூலை 20-ஆம் தேதி அளித்த உத்தரவில், 'அதிமுக அலுவலகத்தின் சீலை அகற்றி அதன் சாவியை எடப்பாடி பழனிசாமி வசம் வருவாய்த் துறை ஒப்படைக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் உச்சநீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த நிலையில், எடப்பாடி கே.பழனிசாமி இந்த மேல் முறையீட்டு விவகாரத்தில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார்.

வழக்குரைஞர் பாலாஜி ஸ்ரீநிவாசன் மூலம் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், 'இந்த மேல்முறையீட்டு வழக்கில் தங்கள் தரப்பு கருத்தைக் கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது' என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மகளிர் இலவச பயணப் பேருந்துகளுக்கு 'பிங்க்' நிறம்

சென்னை, ஆக.6: மகளிர் இலவசமாக பயணம் செய்யும் சாதாரண கட்டணப் பேருந்துகளை எளிதில் அடையாளம் காணும் வகையில் அப்பேருந்துகளின் முகப்புபகுதியில் பிங்க் நிறம் அடிக்கப்பட்டுள்ளது. இதில், 50 பேருந்துகளை சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் சனிக்கிழமை கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

சென்னை மெரீனா கடற்கரை அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வண்ணம் தீட்டப்பட்ட 50 சாதாரணக் கட்டண பேருந்துகள் வரிசையாக நின்றிருந்தன. அவற்றை சேப்பாக்கம் சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடக்கிவைத்தார். மகளிர் எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில் மற்ற மாவட்டங்களில் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளுக்கும் பிங்க் வண்ணம் தீட்டப்படும் என்று அமைச்சர் சிவசங்கர் கூறினார்.

உதயநிதி ஸ்டாலின் தொடக்கிவைத்தார்

பிங்க் வண்ணம் தீட்டப்பட்ட பேருந்துகளின் இயக்கத்தை சனிக்கிழமை சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கொடியசைத்து தொடக்கி வைத்த சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின். உடன் போக்குவரத்துத் துறை செயலாளர் கே.கோபால்.

5 புதிய வழித்தடங்களில் சிற்றுந்துகள்: அண்ணாசாலை, ஓமந்தூரார் மருத்துவமனை மெட்ரோ ரயில் நிலைய வளாகத்திலிருந்து சென்னையின் முக்கிய இடங்களுக்கு ஐந்து புதிய வழித்தடங்களில் செல்லும் சிற்றுந்துகள் இயக்கத்தையும் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

புதிய வழித்தட சிற்றுந்துகள் விவரம்: 1. தடம் எண் எஸ் 96: புறப்படும் இடம்: அரசினர் தோட்டம் மெட்ரோ, சேருமிடம்: தலைமைச் செயலகம். (வழி: வாலாஜா சாலை திருவல்லிக்கேணி, மாநிலக்கல்லூரி, எழிலகம், சென்னைப் பல்கலைக்கழகம்) 2. தடம் எண் எஸ் 97: புறப்படும் இடம்: கிண்டி மெட்ரோ, சேருமிடம்: வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலையம். (வழி: செல்லம்மாள் கல்லூரி, கிண்டி ரேஸ் கோர்ஸ், குருநானக் கல்லூரி, வேளச்சேரி) 3. தடம் எண் எஸ் 98: புறப்படும் இடம்: சின்னமலை மெட்ரோ, சேருமிடம் தரமணி: (வழி: சைதாப்பேட்டை நீதிமன்றம், மத்திய கைலாஷ், டைடல் பார்க்) 4. தடம் எண் எஸ் 99: புறப்படும் இடம்: சௌராய் நகர் மெட்ரோ, சேருமிடம் தி.நகர் பேருந்து நிலையம். (வழி: அமைந்தகரை மார்க்கெட், மேத்தா நகர், லயோலா கல்லூரி, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர்) 5. தடம் எண் எஸ் 100: புறப்படும் இடம்: விமான நிலையம் மெட்ரோ, சேருமிடம்: தாம்பரம் மேற்கு. (வழி: பல்லாவரம், குரோம்பேட்டை, சிட்லப்பாக்கம், பூண்டி கடைவீதி, தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு).

ரூ.200 கோடி வருவாயை மறைத்த திரைப்பட தயாரிப்பாளர்கள்

ரூ.26 கோடி பறிமுதல்: வருமான வரித் துறை தகவல்

சென்னை,ஆக.6: தமிழக திரைப்பட தயாரிப்பாளர்களின் வீடு, அலுவலகங்களில் அண்மையில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.200 கோடி வருவாயை மறைத்திருப்பது கண்டறியப்பட்டதாக வருமான வரித் துறை தெரிவித்தது. மேலும், அவர்களது வீடுகளிலிருந்து ரூ.26 கோடி பணம் கைப்பற்றப்பட்டதாகவும் அந்த துறையினர் கூறியுள்ளனர்.

சென்னை நுங்கம்பாக்கம் காம்தார் நகர் முதல் தெருவில் வசிக்கும் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அன்புச்செழியன், கோபுரம் சினிமாஸ் என்ற பெயரில் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் வரி ஏய்ப்பு செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், சென்னை, மதுரையில் உள்ள அன்புச்செழியன் வீடுகள், அலுவலகங்கள், அவரது உறவினர்கள், நண்பர்கள் வீடு, அலுவலகம் ஆகிய இடங்களில் வருமானவரித் துறையினர் கடந்த 2-ஆம் தேதி ஒரே நேரத்தில் சோதனை செய்தனர்.

பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்கள் கலைப்புலி எஸ்.தாணு, எஸ்.ஆர்.பிரபு, ஞானவேல் ராஜா, சத்ய ஜோதி பிலிம்ஸ் உரிமையாளர் தியாகராஜன், லட்சுமணகுமார் ஆகியோரின் வீடுகள், அலுவலகங்கள் ஆகிய இடங்களிலும் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய ஊர்களில் சுமார் 40 இடங்களில் நடைபெற்றன. நான்கு நாள்கள் நடைபெற்ற இச் சோதனை கடந்த வெள்ளிக்கிழமை முழுமையாக முடிவடைந்தது.

புதிய திரைப்பட வசூல் தொகை: இந்த சோதனை குறித்து தில்லி வருமானவரித் துறையின் ஆணையர் சுரபி அலுவாலியா சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சோதனையில் கணக்கில் வராத பண பரிவர்த்தனைகள், முதலீடுகள் தொடர்பான ஆவணங்கள், டிஜிட்டல் ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

திரைப்பட பைனான்சியர்கள், திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவை பிற நிறுவனங்களுக்கு கடன் வழங்கியிருப்பது தொடர்பான உறுதி மொழி பத்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த கடன்கள் தொடர்பாக கணக்கு விவரம் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த கடன் பரிவர்த்தனை மூலம் வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், வழக்கமான கணக்குப் புத்தகங்களில் காட்டப்படும் தொகையை விட, புதிய திரைப்படங்கள் வெளியிடப்படும்போது வசூலாகும் உண்மையான தொகை மறைக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் உருவாகும் கணக்கில் காட்டப்படாத வருமானம் மூலம் கணக்கில் காட்டாத புதிய முதலீடுகளையும், புதிய வருவாயையும் பெற்றுள்ளனர்.

ரூ.200 கோடி வருவாய் மறைப்பு: திரைப்பட விநியோகஸ்தர்களிடம் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் மூலம் திரையரங்குகளில் இருந்து உண்மையிலேயே வசூலாகும் தொகையை கணக்கில் காட்டாமல் இருப்பது தெரியவந்துள்ளது.

ஆவணங்களின் அடிப்படையில், விநியோகஸ்தர்கள் தங்களுக்குள் ஒரு குழுவை உருவாக்கி, திரையரங்கு வசூலை திட்டமிட்டு குறைத்து காட்டியுள்ளனர். இதனால் உண்மையான வருமானம் மறைக்கப்பட்டுள்ளது.

இச் சோதனையில் மொத்தமாக ரூ.200 கோடி வருவாய் மறைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல கணக்கில் வராத ரூ.26 கோடி ரொக்கம், ரூ.3 கோடி மதிப்புள்ள தங்கநகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

Bank of India
சென்னை சொத்து மீட்பு துறை,
'டௌர் ஹவுஸ்' நாராயணபிள்ளை மாடி, எண்.30, ஈஸ்டான் தெரு, சென்னை-600 001.
போன்:6677 7506/4614/4634/62 பேக்ஸ்:66777460
மின்னஞ்சல்: AssetRecovery.Chennai@bankofindia.co.in
திருத்த அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், 05.08.2022-அன்று நாளிதழ்களில் வெளியிடப்பட்ட M/s.M.சம்பத்தும் & சன்ன்-ன் ஏல விற்பனை அறிவிப்பில் நிலத்தின் ஏரியா மற்றும் பில்டப் ஏரியா பற்றிய தகவல்கள் விடுபட்டுள்ளன. எனவே அசையா சொத்துக்கள் விவரத்தில் "நிலத்தின் ஏரியா 2.20 ஏக்கர்கள் (95,832 சதுர அடி) மற்றும் பில்டப் ஏரியா 26,340 சதுர அடி" என திருத்தி வாசிக்கவும்.
தேதி: 06.08.2022 அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: சென்னை பேங்க் ஆஃப் இந்தியா

யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மண்டல அலுவலகம் சென்னை (வடக்கு), யூனியன் வங்கி பவன், 2வது தளம், எண்:139, பிராட்வே, சென்னை - 600 108
சேர்க்கை அறிவிப்பு
28.07.2022 தேதியிட்ட அடகு வைக்கப்பட்டு மீடகப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை அறிவிப்பில்: 16.08.2022 அன்று அறிவிக்கப்பட்டிருந்த ஏல விற்பனையானது நுவிர்க்க முடியாத காரணத்தால் 26.08.2022 அன்று காலை 11.30 மணிக்கு மாற்றப்பட்டு உள்ளது.
ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.
இடம்: சென்னை தங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நாள்: 06.08.2022 யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

நெஞ்சம் நிறைந்த நூற்றாண்டு பிறந்தநாள்
சிந்தாதிரிப்பேட்டை திரு. ப.க. வேணுகோபால்
07–08–1922 07–08–2022

திருமதி. வே. கனகம்மாள்
உறுப்பினர்
சென்னை மாவட்ட தி.மு.க
தலைவர்
செங்கை மாவட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சம்மேளனம்
உறுப்பினர்
தமிழ்நாடு மீன் வளத்துறை ஆலோசனைக் குழு
உறுப்பினர்
அரசினர் மனநோய் மருத்துவமனை ஆலோசனைக் குழு
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு பருவதராஜ குல மீனவர் சங்கம்
ஆசிரியர் வளரும் மீனவம்
பக.வே.இல்லம் என்றும் தங்கள் நினைவில்
3/2 லபான்டு தெரு மகன்கள் – மகள்கள்
சிந்தாதிரிப்பேட்டை மருமகள்கள் – மருமகன்கள்
சென்னை – 2 பேரன்கள் – பேத்திகள்
9176553363 / 9381553363 கொள்ளுபேரன்கள் – கொள்ளுபேத்திகள்

தினமணி தேவை
எமது நிறுவனத்தில் பணிபுரிய கீழ்க்கண்ட நிலைகளில் தகுதியுள்ள நபர்கள் தேவை.
உதவி ஆசிரியர்கள் (Sub-Editors)
முதுநிலை உதவி ஆசிரியர்கள் (Senior Sub-Editors)
- பட்டதாரி - 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு நன்கு மொழிபெயர்த்தல்
- நல்ல தமிழ் நடையில் எழுதுதல்
- பொது அறிவுத் திறன்
நிருபர்கள் (Reporters)
முதுநிலை நிருபர்கள் (Senior Reporters)
- பட்டதாரி - 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்தில் உரையாடுதல்
- தமிழில் பிழையின்றி எழுதுதல்
- தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் வரும் 7 நாள்களுக்குள் கீழ்க்கண்ட இ–மெயில் முகவரிக்கு புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை அனுப்பலாம்.
E-mail : editordinamani@gmail.com

பேங்க் ஆஃப் பரோடா
செளக்கார்பேட்டை கிளை
பழைய எண். 25, புதிய எண்.45, ரட்டன் பஜார், இருசப்ப மேஸ்திரி தெரு, பார்க் டவுன் அஞ்சல், சென்னை 600001. போன்-044 23454 307/308/309
மின்னஞ்சல்: sowcar@bankofbaroda.com
அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI Act 2002) மற்றும் பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8 (6)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.
இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது, ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள வங்கிக்குச் சேரவேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் பாக்கியை வசூலிப்பதற்காக கடன் வழங்கிய வங்கியிடம் அடமானம் / ஒப்படைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை ஈடுபெற்று கடன் வழங்கிய பேங்க் ஆஃப் பரோடாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். அந்தச் சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் இ-ஏல விற்பனை மூலம் விற்கப்படும். கடன்தாரர்கள் அடமானதாரர் / ஜாமீன்தாரர்கள் / அசையா சொத்துக்கள் / நிலுவைத்தொகை / குறைந்தபட்ச நிர்ணய விலை / இ-ஏல தேதி மற்றும் நேரம், டேவணித்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: (1) திருமதி மனிஷா ஜுகல் கிஷோர் க-பெச்சாராம் (கடன்தாரர்) எண்.81, சரஸ்வதி நகர், வட பெரும்பாக்கம், மாதவரம் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600060, (2) திரு.சீதாராம் சங்கவி (கூட்டு கடன்தாரர்), எண்.81, சரஸ்வதி நகர், வட பெரும்பாக்கம், மாதவரம் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600060.
நிலுவைத் தொகை : 30.07.2022 தேதிப்படி ரூ. 28,68,245.98 மேலும் வட்டி மற்றும் இதர செலவு கட்டணங்கள்
அசையா சொத்து விவரம்: குடியிருப்பு நிலம் மற்றும் G+2 கட்டடம் சர்வே எண் 10, 11 மற்றும் 12/2A2 பகுதி பட்டா எண்.773ன் படி புதிய சர்வே எண்கள் 10/11 & 11/10 பட்டா எண்.2910ன் படி சப் டிவிஷன் சர்வே எண் 10/1 1B & 11/10 மற்றும் 12/2A2A2 விஸ்தீரணம் 1800 சதுர அடி மனை எண்.81, சரஸ்வதி நகர், வட பெரும்பாக்கம், வட பெரும்பாக்கம் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, தற்போது மாதவரம் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ரெட்ஹில்ஸ் சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது.
நிலத்தின் பரப்பு - 1800 சதுர அடி Total Floor Space 5280 சதுர அடி. எல்லைகள்- வடக்கு: 24 அடி சாலை, தெற்கு: மனை எண் 82, கிழக்கு: 24 அடி சாலை, மேற்கு: மனை எண்.78
குறைந்த பட்ச நிர்ணய விலை : ரூ.90,00,000/- | டேவணித் தொகை : ரூ. 9,00,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.25,000/-
ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : 26-08-2022 பகல் 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 12-09-2022 மதியம் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.in/e-auction.htm and https://ibapi.in பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை, தொலைபேசி எண். 044-23454 307/308/309, 8768011601 தொடர்பு கொள்ளலாம்.
இடம் : சென்னை
தேதி : 06-08-2022
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

யூனியன் பேங்க் ஆப் இந்தியா
கும்மிடிப்பூண்டி கிளை, எண்.315, GNT சாலை, கும்மிப்பூண்டி, திருவள்ளூர் -601201. Ph: 044- 27928083
Email: UBIN0822381@unionbankofindia.bank
2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 13(2) 54 இன்படி கேட்பு அறிவிப்பு
விடுநர்:
திரு. உல இளநாகன், அதிகாரபூர்வ அதிகாரி, யூனியன் பாங்க் ஆப் இந்தியா 2002ம் ஆண்டு 54விதியின் படி கும்மிடிப்பூண்டி கிளை
பெறுநர்:
கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்:
1. திரு.பெ.யுவராஜ், 2.திருமதி.கோவிந்தசாமி கங்கா, 3. திருமதி.Y.சங்கீதா, எண்.3,விவேகானந்தா நகர்,2வது தெரு,கும்மிடிப்பூண்டி,சென்னை- 601201
ஐயன்மீர்/ அம்மையீர்,
இந்த அறிவிப்பின் மூலம் முன்னர் கார்ப்பரேசன் வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியாவிடமிருந்து தாங்கள் பெற்ற பின்வரும் கடன் வசதிகளுக்கான கேட்பு அறிவிப்பு.

வ. எண்.	வசதி	வரம்புகள்	அனுமதி பெற்ற	நிலுவை தொகை
1.	CHOME56063 1000408930	ரூ. 15,00,000.00	2012-2013	16/04/2022 அன்றுள்ளபடி ரூ. 7,50,840.33
2.	CHOME56063 1000409007	ரூ. 13,00,000.00	2014-2015	16/04/2022 அன்றுள்ளபடி ரூ. 10,49,040.00
3.	CGSAN56061 6000036957	ரூ. 10,00,000.00	2015-2016	25/04/2022 அன்றுள்ளபடி ரூ. 3,24,069.91
4.	UCPLS116726 590000001	ரூ. 5,00,000.00	2020-2021	25/04/2022 அன்றுள்ளபடி ரூ. 3,76,793.00

திருமதி.டி.கங்கா அவர்களின் உரிமைப்பெற்ற அடமானத்தில் உள்ள சொத்து:
வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கும்மிடிப்பூண்டி சார்பதிவு மாவட்ட அதிகாரவரம்பிற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம் - 600120, எண்.75,பழைய கும்மிடிப்பூண்டி வட்டம் & கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.5868/182, பட்டா எண்.2267 இன் படி புதிய சர்வே எண்.586/12 இல் அடங்கிய, D.T.C.P எண்.746/1990 இன் படி "திருவள்ளுவர் நகர்", என்ற பெயரில் உள்ள அங்கீகாம் பெற்ற மனையிரிவின் மனை எண்.19 இல் உள்ள 2142ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனைச்சார்ந்த அனைத்து தூண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: காலி மனை; தெற்கில்: 24.அடி அகல சாலை; கிழக்கில்: மனை எண்.20; மேற்கில்: மனை எண்.18; நாற்புறப்புகள்: - கிழக்கு மேற்காக வட புறம்: 37.அடி.கிழக்கு மேற்காக தென் புறம்: 35.அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 63.அடி.வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 56.அடி, ஆக மொத்தம் 2142ச.அடி.
நீங்கள் அனைவரும் கூட்டாகவும் பலவிதமாகவும் ரூ.25,00,743.24 (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து எழுநூற்று நாற்பத்து மூன்று மற்றும் பைசா இருபத்து நான்கு) + ஒப்பந்தம்(கள்) படி அடுத்தடுத்த வட்டியுடன் அசல் தொகை மற்றும் / அல்லது தவணைகள் / வட்டி அல்லது இரண்டையும் திருப்பிச் செலுத்த தவறிவிட்டதால், மற்றும் / அல்லது கணக்கு ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளை மீறிய காலத்திற்கு ஒழுங்குற்ற நிலையில் இருப்பதால், உங்கள் கணக்கு 01.07.2021 அன்று முதல் செயல்படாத கணக்கு (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள், நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை புரும்பித்த வட்டியுடன் செலுத்த நீங்கள் இதன்மூலம் அழைக்கப்படுகிறீர்கள், செலுத்தத் தவறினால் மேலே விவரிக்கப்பட்ட வங்கியின் வசம் அடமானம் / ஈடாக வைக்கப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தின் தலையீடு இல்லாமல், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் புனரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்கச் சட்டம் (2002 இன் 54) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டபடி, நீதிமன்றத்தின் தலையீடு இல்லாமல், தொகையை மீட்டெடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளானது.
1. கடன்தாரரின் சொத்துக்களை குத்தகை அல்லது விற்பனைக்கு விடப்படும்,
2. கடன்தாரரின் சொத்துக்களை சுவாதீனம் எடுத்து குத்தகை அல்லது விற்பனைக்கு உரிமை பெறப்படும்.
3. சொத்துக்களை நிர்வகிக்க நபரை (இனி மேலாளர் என்றழைக்கப்படுவார்) ஒருவரை நியமிக்கப்படுவார் வங்கியால் சுவாதீனம் செய்யவுள்ளது.
4. எந்த நேரத்திலும், கடன்தாரரிடமிருந்து கடனீட்டுச் சொத்துக்களை பெற்ற எவரேனும் மற்றும் கடன்தாருக்கு யாரிடமிருந்தேனும் ஏதேனும் தொகை வரவேண்டியிருந்தால், எழுத்துபூர்வமாக அறிவிக்க வேண்டும், பிணைக் கடனிற்கு தேவையான தொகையினை வங்கிக்கு செலுந்தவேண்டும்.
இந்த அறிவிப்பைப் பெற்றபின், வங்கியின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளை எந்த வித விலையங்களுக்கும் உட்படுத்தக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
மேற்கூறிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான கட்டணங்கள், செலவுகள் விற்பனை வருமானத்தில் இருந்து பூர்த்தி செய்யப்படும் மற்றும் விற்பனை வருமானம் வங்கியின் முழுத் தொகையையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை எனில், மீதமுள்ள தொகை SARFAESI சட்டம் 54/2002 இன் படி தனியாகவோ, கூட்டாகவோ அதன் அனைத்து செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் பலவிதமாக பொறுப்பேற்க வேண்டும்.
சட்டப்பிரிவு 13(8) விதிகளின் கீழ், வங்கியின் நிலுவைத் தொகையை வங்கியால் செலுத்தப்படும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் விற்பனை வருமானம் வங்கியின் முழுத் தொகையையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை எனில், மீதமுள்ள தொகை SARFAESI சட்டம் 54/2002 இன் படி தனியாகவோ, கூட்டாகவோ அதன் அனைத்து செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் பலவிதமாக பொறுப்பேற்க வேண்டும்.
சட்டப்பிரிவு 13(8) விதிகளின் கீழ், வங்கியின் நிலுவைத் தொகையை வங்கியால் செலுத்தப்படும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் விற்பனை வருமானம் வங்கியின் முழுத் தொகையையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை எனில், மீதமுள்ள தொகை SARFAESI சட்டம் 54/2002 இன் படி தனியாகவோ, கூட்டாகவோ அதன் அனைத்து செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் பலவிதமாக பொறுப்பேற்க வேண்டும்.
இடம்: சென்னை
நாள்: 28.07.2022
முதன்மை மேலாளர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
யூனியன் பாங்க் ஆப் இந்தியா

சென்னை மவுண்ட் ரோடு கிளை, எண்.787, ரயாலா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை – 600 002. Ph.: 044-2852 0071 Mob: 94983 05602, E-mail: cb0911@canarabank.com
Canara Bank கனரா வங்கி
இ-ஏல விற்பனை தேதி 07.09.2022
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
கனரா வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை கனரா வங்கியின் மவுண்ட் ரோடு கிளை,அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 07.09.2022 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் கடன் நிலுவைத்தொகை	சொத்துக்களின் விவரம் / குறைந்தபட்ச கேட்பு விலை / டேவணித்தொகை
1.	கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1.M/s.ஸ்ரீ பவானி டிரேடர்ஸ், எண்.941, TVS காலனி, 54வது தெரு, அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை - 600101, 2.Mrs.பவானி மற்றும் 3.Mr.சிவசங்கரன், இருவரது முகவரி: எண்.941, TVS காலனி, 54வது தெரு, அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை 600101 கடன் நிலுவைத்தொகை: 01.08.2022 அன்றுள்ளபடி ரூ.3,63,38,000/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.	மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்கு உட்பட்ட RS எண்.279/3 பகுதி, பாடி கிராமம், மனை எண்.941, அறிஞர் அண்ணா நகர், மேற்கு விரிவு, பாடி, சென்னை என்னும் வீடுகளில் வடக்கு தெற்காக 40 அடி, கிழக்கு மேற்காக 60 அடி ஆகமொத்தம் 2400 சதுர அடி நிலம் மற்றும் 1800 சதுர அடி கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த தூண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.942, தெற்கு: மனை எண்.940, கிழக்கு:மனை எண்.927, மேற்கு:30 அடி அகல ரோடு.